## මාධ්‍ය නිවේදනය

**දත්ත: අනුර කුමාර දිසානායක ජනාධිපති ධුර කාලයේ පළමු වසර තුළ 'ඇමති මාරු' පසුගිය ජනාධිපතිවරුන් දෙදෙනා හා සසඳන විට 75%කින් පමණ අඩු වී ඇත.**

ලංකා දත්ත පදනම විසින් නිකුත් කරන ලද නවතම 'දෙපාර්තමේන්තු ප්‍රවාහ' (Department Flow) දෘශ්‍යකරණයට අනුව, ජනාධිපති ගෝඨාභය රාජපක්ෂගේ ධුර කාලයේ පළමු වසරට සාපේක්ෂව, ජනාධිපති අනුර කුමාර දිසානායකගේ ධුර කාලයේ පළමු වසරේදී රාජ්‍ය දෙපාර්තමේන්තුවල (ව්‍යවස්ථාපිත ආයතන හා රාජ්‍ය සංස්ථා ඇතුළුව) අමාත්‍ය මාරුවීම් සංඛ්‍යාව පස් ගුණයකින් පමණ අඩුවෙන් සිදු වී ඇත.


ලංකා දත්ත පදනමේ 'දෙපාර්තමේන්තු ප්‍රවාහ දැක්ම' (Department Flow View) යනු, 2019 වර්ෂයේ සිට එක් එක් ජනාධිපතිවරයාගේ ධුර කාලය තුළ දෙපාර්තමේන්තු, ව්‍යවස්ථාපිත ආයතන හා රාජ්‍ය සංස්ථා මට්ටමින් අමාත්‍යාංශවල සිදුවූ වෙනස්කම්, අන්තර්ක්‍රියාකාරී 'සැන්කි' (Sankey) දෘශ්‍යකරණයකි. එය අදාළ කාලය තුළ නිකුත් කරන ලද සියලු ගැසට් පත්‍ර ඇසුරින් සිදු කෙරෙන දෘෂ්‍ය විශ්ලේෂණයකි.

එහි නවතම දත්තවලට අනුව, ජනාධිපති දිසානායක යටතේ පළමු වසර තුළ විෂය භාර අමාත්‍යවරයා වෙනස් වූයේ දෙපාර්තමේන්තු 37ක් සඳහා පමණි. සංසන්දනාත්මකව, ජනාධිපති ගෝඨාභය රාජපක්ෂගේ පළමු වසරේදී දෙපාර්තමේන්තු 90ක අමාත්‍යවරයා අවම වශයෙන් වරක් වෙනස් වූ අතර, ජනාධිපති රනිල් වික්‍රමසිංහ යටතේ එම සංඛ්‍යාව 91ක් විය. ජනාධිපති ගෝඨාභය රාජපක්ෂ යටතේ සිදු වූ අමාත්‍ය මාරුවීම් විශේෂයෙන් කැපී පෙනෙන අතර එම ධුර කාලයේ පළමු වසර තුළ පමණක් දෙපාර්තමේන්තු 40ක් අමාත්‍යවරුන් තිදෙනෙකු යටතට මාරු කොට තිබේ. එම කාලය තුළ දී ම තවත් දෙපාර්තමේන්තු 3ක් අමාත්‍යවරුන් සිව්දෙනෙකු යටතේ ක්‍රියාත්මක වී තිබේ.




*රූපය 1: සෑම ජනාධිපති ධුරයකම පළමු වසර සඳහා දෙපාර්තමේන්තු සඳහා අමාත්‍ය වෙනස්කම්.*

***අවසන් ජනාධිපතිවරුන් තිදෙනාගේ පළමු වසර තුළ දෙපාර්තමේන්තුවලට අදාළ අමාත්‍යවරුන් වෙනස් වීම***





*රූපය 2: එක් එක් ජනාධිපති ධුරයේ පළමු වසර සඳහා දෙපාර්තමේන්තු වෙනස්කම් සහ සාපේක්ෂ සැන්කි ප්‍රස්ථාර.*

පසුගිය ජනාධිපති ධුර කාල තුන සලකා බලන විට, අමාත්‍ය විෂය පථයන්හි වැඩිම වෙනස්කම් සංඛ්‍යාවක් සිදු වී ඇත්තේ ගෝඨාභය රාජපක්ෂ ජනාධිපති ධුර කාලයේ පළමු වර්ෂය තුළදීය.

**එක් එක් ජනාධිපති ධුර කාලයේ පළමු වර්ෂය තුළ අමාත්‍ය විෂය පථ වෙනස්කම්**

එම ජනාධිපති ධුර කාල තුන අතරින් විශාලතම අමාත්‍ය විෂය පථ ප්‍රතිසංවිධානය දක්නට ලැබුණේ ජනාධිපති රනිල් වික්‍රමසිංහ යටතේ වන අතර, 2022 ජූලි මාසයේ ඔහු තම ආණ්ඩුව පිහිටුවීමෙන් අනතුරුව දෙපාර්තමේන්තු 22ක් කර්මාන්ත අමාත්‍යවරයාගෙන් ඉවත් කොට රාජ්‍ය අමාත්‍යාංශ දෙකකට මාරු කරන ලදී.





*රූපය 3: ජනාධිපති රනිල් යටතේ 05/10/2022 සිට 11/10/2022 දක්වා දෙපාර්තමේන්තු 22 ව්‍යාපාරය සඳහා සැන්කි ප්‍රස්ථාරය.*

ජනාධිපති ගෝඨාභය රාජපක්ෂ පාලන සමයේදී, 2020 මැතිවරණයෙන් අනතුරුව කැබිනට් මණ්ඩලය පිහිටුවීමෙන් පසු එළඹි වසර තුළ සිදු වූ විශාලතම අමාත්‍ය ධුර වෙනස වූයේ, ජාතික ආරක්ෂක, ස්වදේශ කටයුතු සහ ආපදා කළමනාකරණ රාජ්‍ය අමාත්‍යවරයා යටතේ පැවති දෙපාර්තමේන්තු 18ක් වෙනත් අමාත්‍යාංශ යටතට පත් වීමයි.




*රූපය 4: ජනාධිපති ගෝඨාභය රාජපක්ෂ යටතේ 11/12/2020 සිට 16/02/2021දක්වා දෙපාර්තමේන්තු 18 ව්‍යාපාරය සඳහා සැන්කි ප්‍රස්ථාරය.*

ජනාධිපති අනුර කුමාර දිසානායක යටතේ සිදු වූ විශාලතම අමාත්‍ය විෂය පථ වෙනස වූයේ, නාගරික සංවර්ධන, ඉදිකිරීම් සහ නිවාස අමාත්‍යවරයා යටතේ තිබූ දෙපාර්තමේන්තු 19ක් වරාය සහ සිවිල් ගුවන් සේවා අමාත්‍යවරයා යටතට මාරු කිරීමය.




*රූපය 5: ජනාධිපති අනුර යටතේ 25/11/2024 සිට 11/10/2025 දක්වා 19 දෙපාර්තමේන්තු ව්‍යාපාරය සඳහා සැන්කි ප්‍රස්ථාරය.*

මෙම විශ්ලේෂණය සඳහා සලකා බලන ලද කාල පරිච්ඡේද වූයේ, අලුතින් තේරී පත් වූ ජනාධිපතිවරුන් පාර්ලිමේන්තුව තුළ සිය බලය තහවුරු කර ගැනීමෙන් අනතුරුව ගත වූ පළමු වසරයි. පාර්ලිමේන්තුව තුළ බලය තහවුරු කර ගැනීම යනු නව ජනාධිපතිවරයා යටතේ මහ මැතිවරණයක් පැවැත්වීම හෝ පාර්ලිමේන්තුව විසින් තේරී පත් කර ගනු (ජනපති රනිල් වික්‍රමසිංහට අදාළව) ලැබීමයි. ඒ අනුව, සලකා බලන ලද කාල පරිච්ඡේද වූයේ: ජනාධිපති ගෝඨාභය රාජපක්ෂ සඳහා 2020 අගෝස්තු - 2021 අගෝස්තු; ජනාධිපති රනිල් වික්‍රමසිංහ සඳහා 2022 ජූලි - 2023 ජූලි; සහ ජනාධිපති අනුර කුමාර දිසානායක සඳහා 2024 නොවැම්බර් - 2025 නොවැම්බර් යන කාලයන්ය. වර්තමාන රජය බලයේ සිට ඇත්තේ මාස 20ක පමණ කාලයක් වන බැවින්, විශ්ලේෂණය සඳහා කාල පරිච්ඡේදය ලෙස පළමු වර්ෂය තෝරා ගනු ලැබිණි.

මෙම දත්තවලට අදාළ ක්‍රමවේදය සහ දෙපාර්තමේන්තු ප්‍රවාහ දර්ශනය (Department Flow View) පිළිබඳ වැඩිදුර විස්තර [www.opendata.lk](http://www.opendata.lk) වෙතින් ලබා ගත හැකිය.

**Press release**

## Data: Ministerial 'Musical Chairs' Fell by Nearly 75% Under Dissanayake Presidency Compared to Past Two Presidents

Government departments (including statutory institutions and public corporations) saw nearly five times fewer ministerial changes during the first year of President Anura Kumara Dissanayake's presidency compared to the first year of President Gotabaya Rajapaksa's presidency, according to the newest 'Department Flow' visualisation by the Lanka Data Foundation.

Lanka Data Foundation's Department Flow View helps visualise changes in ministries at the level of departments, statutory institutions and public corporations during the terms of each president since 2019, through an interactive Sankey visualisation across multiple dates of institutions being gazetted.

According to its latest data, under President Dissanayake, only 37 departments had any change of subject minister within the first year. By comparison, 90 departments saw their minister changed at once during President Gotabaya Rajapaksa's first year, while the figure stood at 91 under President Ranil Wickremesinghe. The reshuffling under President Gotabaya Rajapaksa was particularly pronounced: 40 departments had three different ministers within the first year, and 3 more departments were moved under four different ministers.




*Figure 1 : Ministerial changes for departments for the first year of each presidency.*

**Ministerial changes of departments under each presidency**





*Figure 2 : Department changes and relative sankey charts for the first year of each presidency.*

Across the last three presidencies, the largest number of times departments changed minister occurred during the first year of the Gotabaya Rajapaksa presidency.

***Ministerial portfolio changes for the 1st year of each Presidential term***

Among the three presidencies, the largest ministerial portfolio reorientation was seen under President Ranil Wickremesinghe, with 22 departments breaking out of the Minister of Industries and moving to two state ministries after forming his government in July 2022.





*Figure 3 : Sankey chart for the 22 department movement from 05/10/2022 to 11/10/2022 under President Ranil.*

Under Gotabaya Rajapaksa, the biggest ministerial portfolio change at the start of the first year, after the cabinet was formed, was a 18 departments change for the State Minister of National Security, Home Affairs and Disaster Management.




*Figure 4 : Sankey chart for the 18 department movement from 11/12/2020 to 16/02/2021 under President Gotabaya.*

Under Anura Kumara Dissanayake, the biggest ministerial portfolio change was 19 departments under the Minister of Urban Development, Construction and Housing moving to the Minister of Ports and Civil Aviation.





*Figure 5 : Sankey chart for the 19 department movement from 25/11/2024 to 11/10/2025 under President Anura.*

The periods considered were when the newly-elected presidents consolidated power in the parliament, following a general election, or being elected by parliament (for President Wickremesinghe). Accordingly, the time periods under consideration were: August 2020-August 2021; July 2022-July 2023; and November 2024-November 2025. The first year was selected as the period of analysis, as the current government has been in office for less than two years.

More details on the methodology and the Department Flow View can be accessed at [www.opendata.lk](http://www.opendata.lk) website.

# ஊடக வெளியீடு

## ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் காலத்தில் அமைச்சு மாற்றங்கள் முன்னைய இரு ஜனாதிபதிகளுடன் ஒப்பிடுகையில் சுமார் 75% குறைந்துள்ளன

லங்கா டேட்டா ஃபவுண்டேஷனின் (Lanka Data Foundation) அண்மைய 'Department Flow' காட்சிப்படுத்தலின்படி, ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அவர்களின் பதவிக்காலத்தின் முதல் ஆண்டில், அரச திணைக்களங்கள் (நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் உட்பட) அமைச்சுக்களின் கீழ் இடம்பெற்ற மாற்றங்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் பதவிக்காலத்தின் முதல் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுமார் ஐந்து மடங்கு குறைவாக உள்ளன.


லங்கா டேட்டா ஃபவுண்டேஷனின் Department Flow View, 2019 முதல் ஒவ்வொரு ஜனாதிபதியின் பதவிக்காலத்திலும், அரச வர்த்தமானி அறிவிப்புகள் வெளியிடப்பட்ட பல்வேறு காலப்பகுதிகளின் அடிப்படையில், திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் அமைச்சுகளுக்கிடையில் எவ்வாறு மாற்றப்பட்டுள்ளன என்பதை, தொடர்பாடக்கூடிய (interactive) Sankey காட்சிப்படுத்தலின் மூலம் வெளிப்படுத்துகிறது.

அண்மைய தரவுகளின்படி, ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அவர்களின் பதவிக்காலத்தின் முதல் ஆண்டில், 37 திணைக்களங்களில் மட்டுமே விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனுடன் ஒப்பிடுகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் பதவிக்காலத்தின் முதல் ஆண்டில் 90 திணைக்களங்களும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் முதல் ஆண்டில் 91 திணைக்களங்களும் அமைச்சு மாற்றங்களுக்கு உள்ளாகியிருந்தன. குறிப்பாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் ஆட்சிக் காலத்தில் அமைச்சு மறுசீரமைப்புகள் மிகவும் அதிகமாக இடம்பெற்றன. முதல் ஆண்டிலேயே 40 திணைக்களங்கள் மூன்று வெவ்வேறு அமைச்சர்களின் கீழ் செயல்பட்டன; மேலும் 3 திணைக்களங்கள் நான்கு வெவ்வேறு அமைச்சர்களின் கீழ் மாற்றப்பட்டன.




**படம் 1: ஒவ்வொரு ஜனாதிபதிகளின் ஆட்சியின் போதும் முதல் ஆண்டில் அமைச்சர்கள் மாற்றப்பட்ட திணைக்களங்களின் எண்ணிக்கை**

**ஒவ்வொரு ஜனாதிபதிகளின் ஆட்சியின் கீழும் அமைச்சர்கள் மாற்றப்பட்ட திணைக்களங்கள்**



**கோட்டாபய ராஜபக்ஷ**

**அமைச்சர்கள் மாற்றப்பட்ட மொத்த திணைக்கள மாற்றங்கள்**

ஜனாதிபதி பதவியின் முதல் ஆண்டில் **179 முறை**

காலப்பகுதி: 13.08.2020 - 13.08.2021

கண்காணிக்கப்பட்ட திணைக்களங்கள்: 465

**ரணில் விக்கிரமசிங்க**

**அமைச்சர்கள் மாற்றப்பட்ட மொத்த திணைக்கள மாற்றங்கள்**

ஜனாதிபதி பதவியின் முதல் ஆண்டில் **156 முறை**

காலப்பகுதி: 26.07.2022 - 26.07.2023

கண்காணிக்கப்பட்ட திணைக்களங்கள்: 457

**அனுர குமார திசாநாயக்க**

**அமைச்சர்கள் மாற்றப்பட்ட மொத்த திணைக்கள மாற்றங்கள்**

ஜனாதிபதி பதவியின் முதல் ஆண்டில் **37 முறை**

காலப்பகுதி: 25.11.2024 - 25.11.2025


கண்காணிக்கப்பட்ட திணைக்களங்கள்: 463

**படம் 2: ஒவ்வொரு ஜனாதிபதியின் பதவிக்காலத்தின் முதல் ஆண்டில் திணைக்களங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய Sankey வரைபடங்கள்.**

கடந்த மூன்று ஜனாதிபதி பதவிக்காலங்களில், திணைக்களங்கள் அமைச்சர்களின் கீழ் அதிகளவில் மாற்றப்பட்ட காலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் பதவிக்காலத்தின் முதல் ஆண்டாகும்.

ஒவ்வொரு ஜனாதிபதி பதவிக்காலத்தின் முதல் ஆண்டில் அமைச்சுப் பொறுப்புகளில் ஏற்பட்ட மாற்றங்கள்

மூன்று ஜனாதிபதி பதவிக்காலங்களிலும், அமைச்சுப் பொறுப்புகளின் மிகப்பெரிய மறுசீரமைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றது. 2022 ஜூலை மாதத்தில் அவர் தனது அரசாங்கத்தை அமைத்ததைத் தொடர்ந்து, கைத்தொழில் அமைச்சின் கீழ் இருந்த 22 திணைக்களங்கள் பிரிக்கப்பட்டு, இரண்டு இராஜாங்க அமைச்சுகளின் கீழ் மாற்றப்பட்டன.





**படம் 3: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஆட்சிக்காலத்தில் 2022.10.05 முதல் 2022.10.11 வரை 22 திணைக்களங்கள் மாற்றப்பட்டதை விளக்கும் Sankey வரைபடம்.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் ஆட்சிக்காலத்தில், முதல் ஆண்டின் ஆரம்பத்தில் அமைச்சரவை அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற மிகப்பெரிய அமைச்சுப் பொறுப்பு மறுசீரமைப்பாக, தேசிய பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் கீழ் 18 திணைக்களங்கள் ஒரே நேரத்தில் மாற்றப்பட்டன.




**படம் 4: ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் ஆட்சிக்காலத்தில் 2020.12.11 முதல் 2021.02.16 வரை 18 திணைக்களங்கள் மாற்றப்பட்டதை விளக்கும் Sankey வரைபடம்.**

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அவர்களின் ஆட்சிக்காலத்தில், மிகப்பெரிய அமைச்சுப் பொறுப்பு மறுசீரமைப்பாக நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழிருந்த 19 திணைக்களங்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் கீழ் மாற்றப்பட்டன.




**படம் 5: ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அவர்களின் ஆட்சிக்காலத்தில் 2024.11.25 முதல் 2025.10.11 வரை 19 திணைக்களங்கள் மாற்றப்பட்டதை விளக்கும் Sankey வரைபடம்.**

ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட காலப்பகுதிகள், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிகள் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் தங்களது ஆட்சியை நிலைநிறுத்திய காலப்பகுதிகளாகவும், (ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் நிலையில்) பாராளுமன்றத்தால் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அமைந்த காலப்பகுதியாகவும் அமைந்தன.

அதன்படி, ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதிகள் பின்வருமாறு: 2020 ஆகஸ்ட் - 2021 ஆகஸ்ட், 2022 ஜூலை - 2023 ஜூலை, 2024 நவம்பர் - 2025 நவம்பர். தற்போதைய அரசு இரண்டு ஆண்டுகளுக்கு குறைவாகவே பதவியில் இருப்பதால், ஒவ்வொரு ஜனாதிபதியின் ஆட்சியின் முதல் ஆண்டு ஆய்வுக்காலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆய்வு முறையியல் (Methodology) மற்றும் (Department Flow View) தொடர்பான மேலதிக தகவல்களை இங்கே அணுகலாம் – www.opendata.lk